# <u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

## <u>OS – 1/2018</u>

நாள் 18.11.2025

PW2 – ஆறுமுகம்

த/பெ – முத்துசாமி

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th day of November 2025)**

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதின்றத்திலிருந்து சம்மன் எதுவும் வரவில்லை என்றால் சரிதான். வாதிகள் சொன்னதின் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தானது சுமார் 1/2 ஏக்கர் இருக்கும். அந்த சொத்து பசுபதி, ரகுபதி ஆகியோருக்கு பாத்தியப்பட்டது. அந்த சொத்து சம்பந்தமான ஆவணத்தை பார்த்துள்ளேன். 1–ம் வாதி சண்முகராஜ் எனக்கு உறவினர். 2–ம் வாதி மாராத்தாள் எனது மனைவி. 2002–ம் ஆண்டிலிருந்து பசுபதியும், நானும் காய்கறி வியாபாரம் செய்த வகையில் எனக்கு அறிமுகம். அவ்வாறு, உழவர் சந்தையில் காய்கறி வியாபாரம் செய்தது சம்பந்தமாக அடையாள அட்டை எனக்கு கொடுத்துள்ளார்கள். அந்த அடையாள அட்டையை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 17.12.2015–ம் தேதியில் சொத்தை விற்பதாக என்னிடம் சொன்னார்கள். அதன்பேரில் நானும், வாதிகளும் சென்று பார்த்தோம்.

2. தாவா சொத்தை வில்லங்கம் பார்த்து தான் ஒப்பந்தம் போட்டோம். கிரைய தொகையாக ரூ.5,50,000/– பேசப்பட்டது. 1–ம் வாதி அண்ணமார் பைனான்ஸ் நடத்தி வந்தார் என்றால் சரிதான், தற்போது நடத்துவதில்லை விவசாயம் தான் செய்து வருகிறார். அந்த பைனான்ஸ் மூலமாக அவர்

நிறைய பல நபர்களுக்கு கடன் கொடுத்து வந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 1–ம் வாதி பைனான்ஸ் மூலமாக கடன் கொடுத்து அதற்கு ஆதரவாக பல நபர்களிடம் கிரைய ஒப்பந்தம் போடுவது தான் வழக்கமாக கொண்டிருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் சொன்ன 17.12.2015–ம் தேதியில் பசுபதி தோட்டத்தில் வைத்து தான் காலை 9.00 மணிக்கு பேசினோம். பின்பு அங்கிருந்து பத்திர அலுவலகத்திற்கு சுமார் 10.00 மணிக்கு சென்றிருப்போம். பத்திர அலுவலகத்திற்கு வாதிகளும், பிரதிவாதிகளும், நானும் மற்றும் ஈஸ்வரனும் சென்றோம். நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், எந்தவொரு ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. சாட்சி ஈஸ்வரன் என்பவரும் எனது உறவினர் தான் என்றால் சரியல்ல. அந்த ஒப்பந்தத்தில் காலக்கெடு 2 வருட காலம் போடப்பட்டது. அப்போது ரூ.5,50,000/–ஐ வாதிகள் முன்பணமாக கொடுத்தார்கள். சொத்திற்கு விலை ரூ.5,50,000/– தான் பேசப்பட்டது. அந்த தொகை முழுவதையும் வாதிகள் பிரதிவாதிகளிடம் கொடுத்து விட்டார்கள்.

3. நான் சொல்வது போல கிரைய தொகையான ரூ.5,50,000/– முழுத்தொகையையும் வாதிகள் கொடுத்து விட்டதாக நான் சொல்லியுள்ள நிலையில் அன்றைய தினமே கிரைய ஆவணம் ஏன் எழுதி கொள்ளவில்லை என்றால் பிரதிவாதிகள் தான் 2 ஆண்டு காலம் அவகாசம் கேட்டார்கள். 2–ம் வாதி மாராத்தாள் எனது மனைவி என்ற முறையில் அவருடைய வரவு செலவுகள் அனைத்தும் கணவர் என்ற முறையில் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாதிகளிடம் கடனாக ரூ.3,00,000/–ஐ 2015–ம் வருடம் வாங்கியிருந்தார்கள் என்றும், அதற்கு

ஆதரவாக தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.18 18:56:19 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**